**அசல்வழக்கு எண். OS. 134/2023- PW1 .**
**திரு.சிவலிங்கா த/பெ.**

**நாள்:05.12.2024.**

**குறுக்கு விசாரணை :**

சத்தியமாகச் சொல்கிறேன்.

நான் 4 வது வரை படித்துள்ளேன்.

எனக்கு தமிழ் வராது கனடா தான் வரும்.

நான் பிரமாண பத்திரிக்கையில் அது எனக்கு கனடாவில் படித்து காண்பிக்கப்ட்டது என்று கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

தாவா சம்பந்தப்பட்ட சொத்தின் அனைத்து சங்கதிகளும் எனக்கு தெரியும்.

தாவா சொத்து ஆதியில் சின்னமுனியப்பாவுக்கு பாத்தியப்பட்டது ஆகும்.

அவர் 15.07.1992 ல் இறந்துவிட்டார்.

அவர்களது குழந்தைகள் 10 பேர்கள், 1.ரேவம்மா, 2. தேவராஜ், 3. லக்கம்மா, 4.ரவிகுமார், 5. சாவித்ரியம்மா, 6. இந்திரா, 7. லட்சுமிகாந், 8. பரத், 9. பூர்ணிமா, மற்றும் 10. வேதவள்ளி ஆகியோர்கள் அவரது வாரிசு என்றால் சரிதான்.

இந்த சொத்து சம்பந்தமாக இவர்களுக்குள் எந்த பாகபிரிவினையும் இன்று வரை ஆகவில்லை.

இந்த தாவ சொத்து மேலே சொன்ன வாரிசு தாரர்களில் தேவராஜ் மற்றும் சாவித்திரி மட்டும் தான் எனக்கு தாவா சொத்தை பொறுத்த வரை கிரய ஒப்பந்தம் 14.07.2021 ம் தேதி எழுதி கொடுத்தார்கள்.

மேலெ சொன்ன 2 பேர்கள் தான் அந்த கொத்தை அவர்கள் விற்பதாக எனக்கு தெரிவித்தார்கள்.

அந்த கிரய ஒப்பந்தபத்திரத்தில் எனக்கு சொத்து எனக்கு எந்த சொத்து விற்கப்படுகிறது என்று 4 நாட்கள் Idnedified செய்து குறிப்பிட்டு போட்டு தரவில்லை.

அக்கிமெண்டடில் 6 மாதம் காலம் தான் அளிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

நான் அந்த 6 மாதத்திற்குள் பிரதிவாதியை அனுகி எந்த ஒரு சட்டபூர்வ நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

நான் ஒப்பந்தத்தில் போட்ட அட்ரஸ் மற்றும் தாவாவில் குறிப்பிட்டுள்ள முகவரி 2ம் ஒன்னுதான் என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் எனக்கு அந்த முகவரியில் அனுப்பிய **Replay** நேட்டிஸ் நான் அந்த முகவரியில் இல்லை என்று திருப்பட்டது என்றால் சரிதான்.

நான் இந்த வழக்கில் மேலே சொன்ன முகவரியில் இல்லை என்று சொல்லி **Plaint** ஐ திருத்தவில்லை.

இந்த சாட்சி மூலமாக திருப்பட்ட பிரதிவாதியின் சட்டஅறிவிப்பு **Ex.B1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி எனது வழக்கறிஞர் அனுப்பிய பதில் குறித்து எனக்கு தெரிவித்தார்.

தாவா சொத்தில் மற்ற பங்குதாரர்கள் எனக்கு விற்றவர்களில் கூட பிறந்தவர்கள் என்பதால் நான் கிரய ஒப்பந்தம் செய்தேன்.

ஒரு கூட்டு குடும்ப சொத்தை மற்ற பங்குதாரர்களுக்கு தெரியமல் கியரயம் செய்வது சட்டப்படி தவறு என்றுால் சரியல்ல.

நான் எனது சட்ட அறிவிப்பு இன்று கிரயத்திற்கு வாங்குகிறேன் என்று குறிப்பட்டு தேதி கூறவில்லை என்றால் சரிதான்.

நான் கோட்டில் மீதம் உள்ள தொகையை கட்டவில்லை.

உங்களுக்கு சட்டப்படி நீங்க கேட்ட பரிகராம் கிடைக்ககூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது, மறுவிசாரணை இல்லை.**

**ஓம்./-திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**